பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 05 2025 **FRIDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மேற்கத்திய எல்லையில் பாகிஸ்தான் மேற்கொண்ட குண்டு வீச்சு தாக்குதல் முயற்சிகள் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாக இந்தியா தெரிவித்துள்ளது.

- தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைக்கு உலக நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- நாடுமுழுவதும் அத்தியாவசிய மருந்துகள் போதிய அளவு கையிருப்பில் இருப்பதை மருத்துவமனைகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

- உலக கத்தோலிக்க திருச்சபையின் புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள போப் லியோவுக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

- **Takhti** கோப்பைக்கான மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Jaskaran Singh** தங்கப்பதக்கம் வென்றார்.

<<<<<>>>>>

இந்தியாவின் மேற்குப் பகுதி எல்லையில் பாகிஸ்தான் மேற்கொண்ட குண்டுவீச்சு மற்றும் ட்ரோன் தாக்குதல் முயற்சிகள் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாக இந்தியா தெரிவித்துள்ளது

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி இதனை தெரிவித்தார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடர்ந்து, பாகிஸ்தானின் 400க்கும் மேற்பட்ட ட்ரோன்கள் இந்திய படையினரால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஏற்கனவே மூடப்பட்டுள்ள கர்தார்பூர் சாஹிப் வழித்தட சேவை மறுஉத்தரவு வரும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் வேண்டுமென்றே குருத்வாரா உள்ளிட்ட வழிபாட்டு தலங்கள் மற்றும் பள்ளிகளை குறிவைத்து குண்டு வீச்சு தாக்குதல்களை நடத்துவதாகவும், அந்த தாக்குதல்களை இந்திய படையினர் வெற்றிகரமாக முறியடித்து வருவதாகவும் அவர் கூறினார்.

பாகிஸ்தானின் ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் தோல்வியடைந்ததாகவும், கராச்சி – லாகூர் இடையே பயணிகள் விமான வழித்தடத்தில் இத்தகைய தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய வான்வழியை பாகிஸ்தான் பயன்படுத்துவதற்கு தடை விதித்துள்ள நிலையிலும், சர்வதேச விமான போக்குவரத்துக்கு பாதுகாப்பை மத்திய அரசு உறுதி செய்திருப்பதாகவும் திரு. விக்ரம் மிஸ்ரி கூறினார்.

செய்தியாளர்கள் சந்திப்பின் போது பேசிய விங் கமாண்டர் வியோமிகா சிங், பாகிஸ்தான் தன்னை தற்காத்துக் கொள்ள பயணிகள் விமானத்தை கேடயமாக பயன்படுத்துவதாக குறை கூறினார்.

எனினும், இந்திய விமானப்படை துரிதமாக செயல்பட்டு, பாகிஸ்தானின் தாக்குதல் முயற்சியை முறியடித்ததாக அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் ராணுவம் பலமுறை இந்தியாவின் மேற்கத்திய எல்லை வழியாக வான்வழியில் அத்துமீறி நுழைந்த போதிலும், இந்தியப் படைகள் அவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டு முறியடித்திருப்பதாக கர்னல் சோபியா குரேஷி தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடர்ந்து, தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் அணுகுமுறைக்கு உலக நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

அமெரிக்கா, இங்கிலாந்து, இஸ்ரேல், சவுதி அரேபியா, கத்தார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

இதேபோல், ஐரோப்பிய யூனியன் மற்றும் அதன் 27 உறுப்பு நாடுகளும், ஒருங்கிணைந்த வலுவான அறிக்கை மூலம் இந்தியாவின் செயல்பாடுகளுக்கு ஆதரவு அளிப்பதாக கூறியுள்ளன.

தீவிரவாதத்தை முறியடிக்கும் இந்தியாவின் இறையாண்மை உரிமைக்கு ஆதரவு தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப், ராஜீய அடிப்படையிலான வழிமுறைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

எல்லை தாண்டிய தீவிரவாதத்தை எந்தவொரு நாடும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று இங்கிலாந்து முன்னாள் பிரதமர் திரு. ரிஷி சுனக் கருத்து தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் எதிர்ப்பதாக தெரிவித்துள்ள ரஷ்யா, இருதரப்பிலும் சுமுக சூழலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையில் இந்தியாவுக்கு உறுதியான ஆதரவை இஸ்ரேல் தெரிவிப்பதாக இந்தியாவிற்கான அந்நாட்டு தூதர் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா, தமது அமைச்சகத்தின் உயரதிகாரிகளுடன், அவசர காலத்தில் சுகாதார ஆயத்தநிலை குறித்து ஆலோசனை நடத்தினார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், சுகாதார நடைமுறைகள் மற்றும் பணியாளர்கள் தயார் நிலை குறித்தும் ஒருங்கிணைந்த மற்றும் உடனடி நடவடிக்கைகள் எடுப்பதற்கு வலுவான சூழல் குறித்தும் திரு. நட்டாவிடம் அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

அத்தியாவசிய மருந்துகள், போதிய அளவில் ரத்தவங்கி வசதி, ஆக்ஸிஜன் மற்றும் அவசர சிகிச்சைக்கான மருந்துகள் தயார் நிலையில் இருப்பதை மருத்துவமனைகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

புதுதில்லி எய்ம்ஸ் மற்றும் இதர மத்திய அரசு மருத்துவமனைகள், டாக்டர்கள் மற்றும் செவிலியர்களை ஒருங்கிணைத்து தேவையான நேரத்தில் உடனடியாக பணியமர்த்த தயாராக இருக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மாநில மற்றும் மாவட்ட நிர்வாகத்துடன் மருத்துவமனைகள் ஒருங்கிணைந்து செயல்படுவதுடன், பாதுகாப்புப் படையினர் மற்றும் பிராந்திய அளவிலான மருத்துவர்கள் அவசர கால சூழலை எதிர்கொள்ளும் வகையில், தயாராக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

24 மணிநேரமும் சுகாதார சேவைகள் மற்றும் அனைத்து அவசரகால மருத்துவ வசதிகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று இந்த கூட்டத்தில் மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா அறிவுறுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

அவசரநிலையை எதிர்கொள்வதற்கு அனைத்து மாநிலங்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

தீயணைப்புத் துறை தலைமை இயக்குநரும், ஊர்க்காவல்படையின் தலைமை அதிகாரியுமான திரு. விவேக் ஸ்ரீவத்சவா, அனைத்து மாநிலங்களுக்கும் எழுதியுள்ள கடிதத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

மக்களின் பாதுகாப்பு மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில், பாதுகாப்பு படையினரின் சேவை இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

உலக கத்தோலிக்க திருச்சபையின் புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள போப் லியோவுக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அமைதி, சமாதானம் மற்றும் சேவையை மேம்படுத்துவதற்கான முக்கியமான தருணத்தில் கத்தோலிக்க சபையின் தலைமை பொறுப்பை ஏற்று சேவையாற்ற இருப்பதற்கு தமது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

<<<<<>>>>>

நாட்டில் உணவு தானியங்கள் போதிய அளவு கையிருப்பில் உள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எந்தவொரு அவசர நிலையிலும், மக்கள் அமைதியை கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

உணவு தானிய உற்பத்தி அதிக அளவில் உள்ளதாகவும், எதிர்வரும் பருவ காலத்திலும் தானிய உற்பத்தி அதிகரிப்பதற்கு சாதகமான சூழல் நிலவுவதாகவும் அவர் கூறினார்.

பஞ்சாப் மற்றும் ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர்களுடன் மத்திய அரசு ஆலோசனை நடத்தியிருப்பதாகவும், விதைகள் மற்றும் பயிரிட தேவையான பொருட்களுக்கு உரிய ஏற்பாடுகளை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

இதனிடையே, வர்த்தகர்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் விற்பனை செய்யும் மொத்த மற்றும் சில்லரை வணிகர்கள் காவல்துறை உள்ளிட்ட பாதுகாப்புப் படையினருடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்தியாவசிய பொருட்களை பதுக்கினாலோ, கடத்தலில் ஈடுபட்டாலோ, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

<<<<<>>>>>

மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் சுகாதாரம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளிலும், உயர் பதவி வகிக்கும் அதிகாரிகள் அனைவருக்கும் விடுமுறையை அம்மாநில அரசு ரத்து செய்துள்ளது.

மாநிலத்தில் நிர்வாக பொறுப்புகளில் அனைவரும் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

மஹாராஷ்ட்டிர மாநிலத்தின் பாதுகாப்பு மற்றும் ஆயத்த நிலை குறித்தும் முதலமைச்சர் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இதேபோல், உத்ராகண்ட் மாநில முதலமைச்சர் திரு. புஷ்கர்சிங் தாமி, குஜராத் முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் ஆகியோரும் தங்கள் மாநிலங்களில் நிலவும் சூழல் குறித்தும், ஆயத்த நிலை குறித்தும் காவல்துறை உள்ளிட்ட உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

<<<<<>>>>>

மும்பை தாக்குதல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள தகவூர் ராணாவின் நீதிமன்ற காவலை, ஜூன் மாதம் 6ஆம் தேதிவரை நீட்டித்து, தேசிய புலனாய்வு முகமை சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

18 நாள் **NIA** காவல் நிறைவடைந்ததை அடுத்து, அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அப்போது நீதிமன்றம், தகவூர் ராணாவின் காவலை நீட்டிப்பு செய்து உத்தரவிட்டது.

<<<<<>>>>>

பஞ்சாப் மாநிலத்தில் போதைப்பொருள் கடத்திய நபர் ஒருவரை அம்மாநில காவல்துறையினர் சுட்டுக் கொன்றனர்.

மேலும் இரண்டு கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் கடத்திய நபரை காவல்துறையினர் தடுத்து நிறுத்தியபோது, அவர் துப்பாக்கியால் சுட்டதாகவும், காவல்துறையினர் நடத்திய பதிலடி தாக்குதலில் அவர் கொல்லப்பட்டதாகவும், போதைப்பொருள் தடுப்பு சிறப்பு காவல்படையினர் தெரிவித்தனர்.

அவரிடமிருந்து கை துப்பாக்கி, 2 கிலோ ஹெராயின், 15 லட்சம் ரூபாய் ரொக்கம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

<<<<<>>>>>

**Takhti** கோப்பைக்கான மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Jaskaran Singh** தங்கப்பதக்கம் வென்றார்.

ஈரானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

<<<<<>>>>>

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் தீபிகா குமாரி மற்றும் **Parth Salunkhe** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஷாங்காயில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் தீபிகா குமாரி, சீனாவின் **Li Jiaman-**ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Parth Salunkhe,** கொரியாவின் **Kim Je Deok-**யை வென்றார்.

<<<<<>>>>>

**Taipei** ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Unnathi Hooda** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-8, 19-21 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் **Hung Yi Ting**-ஐ வென்றார்.

**<<<<<>>>>>**

ஆஸ்திரியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் செஸ் போட்டியின் மூன்றாவது சுற்று முடிவில் இந்தியாவின் வைஷாலி ரமேஷ்பாபு முதலிடத்தில் உள்ளார்.

**<<<<<>>>>>**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டி ஒரு வாரத்திற்கு ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<END>>>>>**